www.boomiirjt.com Volume 2, Issue 2 Apr – Jun 2026 E - ISSN: 3139 -1893

BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893 An international open access, peer- reviewed, refereed journal

# மாஸ்லோவின் தேவை நிறைவுக் கோட்பாட்டு நோக்கில் குறுந்தொகை

# Kurunthogai in the Perspective of Maslow's Hierarchy of Needs

**மை. அப்துல் ஹாதி**

பதிவு எண்: MKU23FFOL11185, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலைத் தமிழ்த்துறை, தமிழாய்வு மையம், அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி - 626123.

**முனைவர் பா. தமிழரசி**

உதவிப் பேராசிரியர் மற்றும் ஆய்வு நெறியாளர், முதுகலைத் தமிழ்த்துறை, தமிழாய்வு மையம், அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி - 626123.

**Abdul Hadhi M**

Reg. No.: MKU23FFOL11185, Full-time Research Scholar, PG & Research Department of Tamil, Ayya Nadar Janaki Ammal College (Autonomous), Sivakasi – 626123. Tamilnadu, India.

Email ID: abdulhadhi031198@gmail.com ORCID ID: https://orcid.org/0009-0008-1019-6197

**Dr. P.Thamilarasi**

Assistant Professor and Research Supervisor, PG & Research Department of Tamil, Ayya Nadar Janaki Ammal College (Autonomous), Sivakasi - 626123. Tamilnadu, India.

Email ID: shakthithamil@gmail.com ORCID ID: https://orcid.org/0000-0002-9791-177X

**Abstract**

This paper analyzes the Sangam literature Kurunthogai, a treasure trove of ancient Tamil life, through the lens of American psychologist Abraham Maslow's 'Hierarchy of Needs' theory. Maslow states that human needs progress through a hierarchy, starting from physiological and safety needs to love, belonging, esteem, and self-actualization. This study demonstrates how these five levels of needs seamlessly align with the inner psychology and behaviors of the protagonists (Thalaivan, Thalaivi, and Thozhi) in Kurunthogai. The expressions of love, pangs of separation, and marital values of the Sangam society are explored as manifestations of both lower and higher-order needs. Ultimately, this research comprehensively illustrates that the motivational hierarchy which refines human life was inherently embedded in the lifestyle and ethos of ancient Tamils.

**Keywords**

Kurunthogai, Akam Literature, Sangam Literature, Abraham Maslow, Hierarchy of Needs Theory, Psychology, Psychology of the Heroine.

**ஆய்வுச் சுருக்கம்**

பழந்தமிழரின் அகம் மற்றும் புற வாழ்க்கைக் கருவூலமான குறுந்தொகைப் பாடல்களை, அமெரிக்க உளவியல் அறிஞர் ஆபிரகாம் மாஸ்லோவின் 'தேவை நிறைவுக் கோட்பாட்டுடன்' (Hierarchy of Needs) ஒப்பிட்டு ஆராய்கிறது. மனிதனின் தேவைகள் உடலியல், பாதுகாப்பு, அன்பு, சுயமரியாதை, தன்னிறைவு எனப் படிநிலை வடிவில் நகர்வதை மாஸ்லோ விளக்குகிறார். இக்கோட்பாட்டின் ஐந்து படிநிலைகளும் குறுந்தொகைத் தலைவி, தலைவன் மற்றும் தோழியின் அகமன உணர்வுகளோடும் செயல்பாடுகளோடும் எவ்வாறு பொருந்திப் போகின்றன என்பதைப் பொருத்தமான பாடல்களின் வழி இக்கட்டுரை நிறுவுகிறது. சங்ககால மாந்தர்களின் காதல், பிரிவுத் துயர், தோழியின் கூற்று மற்றும் வாழ்வியல் நெறிகள் அனைத்தும் இக்கோட்பாட்டின் கீழ்நிலை மற்றும் உயர்நிலைத் தேவைகளின் வெளிப்பாடாகவே அமைகின்றன. இறுதியில், மனித வாழ்வைச் செம்மைப்படுத்தும் இத்தேவைகளின் படிநிலைகள் பழந்தமிழர் வாழ்வியலோடு இயல்பாகவே இணைந்துள்ளதை இவ்பகுப்பாய்வு முழுமையாகப் புலப்படுத்துகிறது.

**திறவுச்சொற்கள்**

குறுந்தொகை, அக இலக்கியங்கள், சங்க இலக்கியம், ஆபிரகாம் மாஸ்லோ, தேவை நிறைவுக் கோட்பாடு, உளவியல், தலைவியின் உளவியல்.

**முன்னுரை**

சங்க இலக்கியங்கள் பழந்தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, பண்பாடு, பழக்க வழக்கங்கள், இறை வழிபாடு போன்ற அனைத்தையும் விளக்கும் களஞ்சியமாகத் திகழ்கின்றன. சங்ககால மக்களின் வாழ்க்கை அகம், புறம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அப்பிரிவுகளுள் அகவாழ்வு களவு வாழ்க்கை, கற்பு வாழ்க்கை என இரண்டாகப் பகுக்கப்பட்டுள்ளது. நிலமானது ஐந்து வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஐந்திணை மக்களின் வாழ்க்கையும் ஒழுக்கமும் நிலம் சார்ந்தே நிற்கும். மக்களின் அகப்புறச் செயல்பாடுகளுக்கும் நிலமே காரணமாகின்றது. நிலவியல் சார்ந்த குறுந்தொகைப் பாடல்கள் உளவியல் அறிஞர் ஆபிரகாம் மாஸ்லோவின் தேவை நிறைவுக் கோட்பாட்டோடு பொருந்தி போவதைப் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**உளவியலும் மாஸ்லோவின் தேவை நிறைவுக் கோட்பாடும்**

உளவியல் என்பது மனித மனதின் செயல்பாடுகளையும். மனித நடத்தைகளையும் அறிவியல் முறையில் ஆய்வு செய்கின்ற துறையாகும். உளவியல் தொன்மையான வரலாறு கொண்டது. உளவியல் என்பது சமயம், தத்துவம், அறிவியல் போன்ற பல்துறை தொடர்புடையதாகும். Psychology என்ற ஆங்கிலச் சொற்பதத்தின் மூலச் சொற்கள் “சைக்கி”, “லோஜஸ்” என்னும் கிரேக்கச் சொற்களாகும். “சைக்கி” என்றால் ஆன்மா அல்லது ஆவி என்று பொருள். “லோஜஸ்” என்றால் அறிவியல் அல்லது ஒருவரின் குணம் என்று பொருள். இம்மூலச் சொற்களின் அடிப்படையில் ஆக்ஸ்ஃபோர்டு ஆங்கில அகராதி உளவியலை மனித ஆன்மா அல்லது உள்ளத்து தன்மை, வினை, நிகழ்ச்சி பற்றிய அறிவியல் என்று வரையறுக்கிறது.

உளவியல் (Psychology) என்பது மனித மனம், உணர்வு, சிந்தனை, நடத்தை ஆகியவற்றை அறிவியல் அடிப்படையில் ஆராயும் துறையாகும். வில்லியம் ஜேம்ஸ் உளவியலை "மன வாழ்க்கையின் அறிவியல்" என்று வரையறுக்கிறார். வாட்சன், மனித நடத்தையை ஆய்வு செய்யும் புறநோக்குச் அறிவியலாகக் கருதுகிறார். வுட்வொர்த் தனிமனிதனின் செயல்பாடுகளை ஆராயும் அறிவியலாகவும், மோர்கன் மனிதர் மற்றும் விலங்குகளின் நடத்தையை ஆராயும் துறையாகவும் விளக்குகிறார். பாரன், நடத்தை மற்றும் மனச் செயல்முறைகளை அறிவியல் முறையில் ஆராயும் துறையே உளவியல் எனக் குறிப்பிடுகிறார். இவ்வரையறைகளின் அடிப்படையில் மனிதனின் அகஉணர்வுகள், தேவைகள், உந்துதல்கள் மற்றும் நடத்தைகளை விளக்கும் அறிவியல் துறையாக உளவியல் கருதப்படுகிறது. பல்வேறு காலங்களில் வாழ்ந்து வரும் பல்வேறு அறிஞர்கள் உளவியல் தத்துவக் கோட்பாடுகளை முன்வைத்து வருகின்றார்கள். ஆபிரகாம் மாஸ்லோ என்ற தத்துவ அறிஞர், உலகத்து உயிர்கள் யாவற்றிற்கும் இன்றியமையாத அதிலும் குறிப்பாக மானுட பிறவிகட்கு இன்றியமையாததாக விளங்கும் தேவைகளைப் பற்றிய கோட்பாட்டினை விளக்கியுள்ளார்.

**மாஸ்லோவின் தேவை நிறைவுக் கோட்பாடு**

உலகில் எல்லாவுயிர்க்கும் தேவைகள் என்பது இன்றியமையததாகும், அவற்றுள் மானுடப் பிறவிகட்குச் சற்று அதிகமாகவே தேவைகள் ஏற்படுகின்றன. இன்னபிற உயிர்களை விட உடைகள், பணம், ஆபரணங்கள் போன்ற தேவைகள் உடையவர்களாக மனிதர்கள் உள்ளனர், மனிதர்களின் தேவைகளைப் பற்றிய கோட்பாடுதான் மாஸ்லோவில் தேவை நிறைவுக் கோட்பாடு.

மாஸ்லோவின் தேவை நிறைவுக் கோட்பாட்டின் படி மனிதன் ஒருவன் தன்னுடைய தேவைகளை நிறைவு செய்து கொள்ள வேண்டுமெனில் முதலில் கீழ் மட்ட தேவைகளை நிறைவேற்றினால் தான் அடுத்த கட்டமான மேல் மட்டத் தேவைகளை நோக்கி நகர்வான். உதாரணமாக கீழ் மட்டத் தேவைகளான உணவு, நீர் போன்ற அடிப்படை நிறைவேறியப் பின்னர் தான் பாதுகாப்புத் தேவைகளான ஆடை,

உடல்நலம், வீடு போன்ற தேவைகளைப் பற்றி மனிதனால் சிந்திக்க முடியும். உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமான உணவு, நீர் போன்ற அடிப்படை உடலியல் தேவைகளே நிறைவேறாமல் செல்வம் போன்ற இரண்டாம் நிலைத் தேவைகளைப் பற்றி மனிதன் சிந்திக்க மாட்டான்.

மனிதர்களின் தேவை பற்றிய ஆபிரகாம் மாஸ்லோவின் கோட்பாடு பெரும்பாலும் மாஸ்லோவின் தேவைகளின் படிநிலை என்றே குறிப்பிடப்படுகிறது. இது மனித வளர்ச்சி மற்றும் ஊக்கத்தின் நிலைகளை விவரிக்கும் ஓர் உளவியல் கட்டமைப்பாகும். மனித தேவைகள் ஒரு படிநிலையில் அமைக்கப்பட்டுள்ளன. அடிப்படைத் தேவைகள் கீழே மற்றும் மேம்பட்ட தேவைகள் மேலே உள்ளன என்று மாஸ்லோ முன்மொழிந்தார். மாஸ்லோவின் கூற்றுப்படி, தனிநபர்கள் இந்தத் தேவைகளை ஒரு குறிப்பிட்ட வரிசையில் மிகவும் அடிப்படை முதல் மிகவும் சிக்கலானது வரை பூர்த்தி செய்யத் தூண்டப்படுகிறார்கள். படிநிலை பொதுவாக ஐந்து நிலைகளைக் கொண்ட ஒரு பிரமிடாக சித்தரிக்கப்படுகிறது.

**ஆபிரகாம் மாஸ்லோவின் தேவை நிறைவுக் கோட்பாட்டின் படிநிலைகள்**

- உடலியல் தேவைகள் - Psychological Needs.
- பாதுகாப்புத் தேவைகள் - Safety Needs.
- அன்புரிமைத் தேவைகள் - Love and Belonging Needs.
- சுயமரியாதைத் தேவைகள்- Self Esteems.
- தன்னிறைவுத் தேவைகள் – Self Actualization.

என்ற ஐந்து நிலைகளையும் மாஸ்லோ பிற்காலத்தில் தன்னிறைவுத் தேவைகளுக்கு அப்பால் மூன்று கூடுதல் நிலைகளைச் சேர்த்தார்.

- அறிவாற்றல் தேவைகள்: அறிவு, புரிதல் மற்றும் ஆய்வு தேவை.
- அழகியல் தேவைகள்: அழகு, சமச்சீர் மற்றும் ஒழுங்கின் தேவை.
- மாறுதல் தேவைகள்: மற்றவர்கள் சுய - உண்மையை அடைய உதவுவது

மற்றும் சுயத்திற்கு அப்பாற்பட்ட ஒன்றை இணைக்க வேண்டும். மாஸ்லோவின் கோட்பாடு, கீழ்நிலைத் தேவைகள் திருப்தி அடையும் போது மட்டுமே உயர்நிலைத் தேவைகள் பொருத்தமானதாக மாறும் என்பதை வலியுறுத்துகிறது.

இக்கோட்பாடுகளை இலக்கியங்களில் சூழல்கள் மற்றும் மானுடத் தன்மைகளை விளக்க பயன்படுத்தலாம். உளவியல் அறிஞர் மாஸ்லோ ஒரு மனிதனின் வாழ்க்கையில் ஒட்டுமொத்தத் தேவை என்பது ஐந்து படிநிலைகளாக உள்ளது என்றும் அவற்றில் உடலியல் சம்பந்தப்பட்ட தேவைகளே முதல் படிநிலைத் தேவையாக உள்ளது என்றும் கூறுகிறார். அவ்வகையில் குறுந்தொகை என்னும் சங்கஅக இலக்கியம் மாஸ்லோவின் உளவியல் கோட்பாட்டோடு பொருந்திப் போவதைக் காண முடிகின்றது. உளவியல் அறிஞர் மாஸ்லோ, ஒரு மனிதனின் வாழ்க்கையில் ஓட்டு மொத்த தேவை என்பது ஐந்து படிநிலைகளாக உள்ளது அவற்றில் **“உடலியல் சம்பந்தப்பட்ட தேவைகளை”** முதல் படிநிலைத் தேவையாக மாஸ்லோ முன்வைக்கிறார்.

1. **உடலியல் தேவைகள்:** இவை மிக அடிப்படையான மனித தேவைகள், உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதவை. அவற்றில் உணவு, தண்ணீர், வெப்பம், பாலியல் உணர்வு மற்றும் ஓய்வு ஆகியவை அடங்கும். தலைவி, தலைவனை களவுக் காலத்தில் குறியிடத்தில் சந்திப்பது வழக்கம் தலைவன் சந்திக்க தாமதிக்கின்ற காலத்தில் தலைவி உயிர்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, நீர் போன்றவற்றைக்கூட புறந்தள்ளி தலைவனின் சந்திப்பை மட்டுமே மையப்படுத்தி காத்திருப்பாள், மாஸ்லோவின் தேவை நிறைவுக் கோட்பாட்டின் படி அடிப்படைத் தேவையான உடலியல் தேவை நிறைவேறும் வரை மற்ற தேவைகளைப் பற்றி சிந்தனை கூட செய்யாதவளாய் தலைவி இருப்பது குறுந்தொகைப் பாடல்களில் ஆங்காங்கே புலப்படுகிறது.

தலைவன் வரை பொருளுக்காக பிரிந்த காலத்தில் அவன் விரைந்து வாராமை பற்றி மிகுந்த வருத்தத்துடனும் தன் மன வருத்தமறியாமல் கவலையின்றி தூங்கும் ஊரில் உள்ளோரை மறைமுகமாக நான் முட்டுவேனோ? தாக்குவேனோ? ஒரு தலைக்கீட்டை மேற்கொண்டு ஆவென்றும் ஒல்லென்றும் ஒலி உண்டாகக் கூப்பிடுவேனோ? என்று தோழியை நோக்கி,

*"முட்டு வேன்கொல் தாக்கு வேன்கொல்*
*ஓரேன் யானுமோர் பெற்றி மேலிட்டு*
*ஆஅ ஒல்லெனக் கூவு வேன்கொல்*
*அலமரல் அசைவளி அலைப்பவென்*
*உயவுநோ யறியாது துஞ்சும் ஊர்க்கே"*

*(குறுந்.28)*

என்று கூறுவதாய் குறுந்தொகைப் பாடலொன்றில் ஔவையார், தலைவனைப் பிரிந்த தலைவியின் உள்ளத்து அகமனவுணர்வானது உடலளவில் தன்னை பாதிப்படையச் செய்வதோடு தான் சார்ந்த புறச் சூழலையும் எரிச்சலுணர்வுடன் பார்க்கச் செய்கின்றதாகவும் குறிப்பிடுகின்றார். இதன் வழியாக தலைவிக்குப் புறச்சூழலை விட உடலியல் ரீதியிலான உணர்வு மேலாண்மைத் தேவைதான் முதன்மையானது என்பதை அறிய முடிகின்றது.

**2. பாதுகாப்புத் தேவைகள்:** உடலியல் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன், பாதுகாப்பிற்கான தேவை ஏற்படுகின்றது என்கிறார் மாஸ்லோ. இதில் உடல் பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் நிதி பாதுகாப்பு ஆகியவை அடங்கும். தலைவனைப் பிரிந்த தலைவி தான் சார்ந்த நிலவியல் அடிப்படையிலான இயற்கைச் சூழல்கள், பருவகால மாற்றங்கள் போன்றவற்றின் வழியாக உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படுவதாகவும் அந்தப் பாதிப்பிலிருந்து பாதுகாப்புப் பெற ஒரே வழி தலைவனின் வருகைதான் என்றும் பாதுகாப்புத் தேவையை குறுந்தொகைப் பாடல்களின் வழியாக பார்க்க முடிகின்றது.

*"தண்வரல் வாடை தூக்கும்*
*கடும்பனி யற்சிரம் நடுங்கு அஞர் உறவே"*

*(குறுந்.76: 5-6)*

*"வடபுல வாடை கழி மழை*
*தென்புலம் படரும் தண்பனி நாளே"*

*(குறுந்.317:6-7)*

வாடைக்காற்று பிரிவுத் துன்பத்தை நடுங்குமாறு தந்ததையும், தலைவன் பிரியாது இப்பனிப்பருவத்தில் உறுதியாக வருவதையும் குறுந்தொகைப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

இரவுக்குறி விரும்பிய தலைவனை நோக்கி தோழி, கரிய கண்களையுடைய ஆண் குரங்கு இறந்த துயர் தளராமல் பெண் குரங்கு மரமேறுதல் முதலான தொழிலைக் கல்லாத வலிய குட்டியைச் சுற்றத்தினிடத்து சேர்த்து உயரமான மலையிலிருந்து குதித்து தானும் உயிரை மாய்த்துக்கொள்ளும் சாரலையுடைய நாட்டுக்குத் தலைவனே நீ நள்ளிரவில் வாரற்க அப்படியல்லாமல் நீ வரின் உனக்கு தீங்கு உண்டாகுமென்று எண்ணி நாம் வருந்துவோம் என்பதை,

*"கருங்கண் தாக்கலை பெரும்பிறி துற்றெனக்*
*கைம்மை உய்யாக் காமர் மந்தி*
*கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி*
*ஓங்குவரை அடுக்கத்து பாய்ந்துயிர் செகுக்கும்*
*சாரல் நாட நடுநாள்*
*வாரல் வாழியோ வருந்துதும் யாமே"*

*(குறுந்.69)*

என்று பாடுவதன் வாயிலாக தலைவனின் பாதுகாப்புத் தேவையைப் பற்றிய சிந்தனையுடையவர்களாக தலைவியும், தோழியும் இருந்தனர் என்பதைக் குறுந்தொகைப் பாடல் வழியாக அறிய முடிகின்றது.

**3. அன்புரிமைத் தேவைகள்:** உடலியல் மற்றும் பாதுகாப்புத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட பிறகு, சமூகத் தேவைகள் முக்கியமானதாகிறது. இது உறவுகள், அன்பு மற்றும் சொந்தமான உணர்வு ஆகியவற்றின் தேவையை உள்ளடக்கியது. குறுந்தொகைப் பாடல் ஒன்றில் உடன்போக்கில் முல்லைத்திணை தலைவி தன் அன்பின் வெளிப்பாடாய் தான் இதுவரை செய்திடாத சமையல் செய்து பரிமாறும் விதத்தினைக் கூடலூர்க்கிழார்,

*"முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்*
*கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்*
*குவளை யுண்கண் குய்ப்புகை கழுமத்*

*தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்*
*இனிதெனக் கணவ னுண்டலின்*
*நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே"*
*(குறுந்.167)*

என்று உடன்போக்கில் சென்ற தலைவி தன் தலைவனுக்கு முற்றிய தயிரைத் தன் காந்தள் மலர் போன்ற மென்மையான விரல்களான தன் சீலை முந்தானையில் வியர்வையைத் துடைத்துக் கொண்டாள். உடுத்திய அதே பாட்டாடையுடன் குழம்புக்குத் தேவையான தாளித்ததினால் ஏற்பட்ட வாசமிகு புகை மைத் தீட்டப்பட்ட கண்களை மறைக்க தானே துழாவிச் சமைத்த இனிமையான புளி சேர்க்காத புளிப்புச் சுவையுடைய தயிரில் தயாரித்த குழம்பினை தலைவனுக்கு கொடுத்து உண்பித்து இன்பம் கொண்டதாகக் குறிப்பிடுவதன் வழியாக தலைவன் மீது தலைவி கொண்ட அன்புரிமை நிலையினைப் புலப்படுத்துகிறார்.

**4. சுயமரியாதைத் தேவைகள் :** மதிப்புத் தேவைகள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. சுயமரியாதை மற்றும் மற்றவர்களிடமிருந்து மதிப்பு (நற்பெயர், அந்தஸ்து). இந்தத் தேவைகள் மரியாதை, தன்னம்பிக்கை மற்றும் அங்கிகாரத்திற்கான விருப்பத்துடன் தொடர்புடையது. குறுந்தொகைப் பாடல் ஒன்றில்,

*"யாரும் இல்லை தானே கள்வன்;*
*தானது பொய்ப்பின், யானெவன் செய்கோ?*
*தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால*
*ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்*
*குருகும் உண்டு தான் மணந்த ஞான்றே!"*
*(குறுந்.25)*

என்று கூறுவதன் வழியாகத் தோழியிடம் தலைவி, தன்னை வரைவு நீடித்தவிடத்து சுயமரியாதையைக் காக்க வருந்திக் கூறியதாக அமைந்துள்ளதைக் காண முடிகிறது.

**5. தன்னிறைவுத் தேவை:** இது மாஸ்லோவின் படிநிலையின் மிக உயர்ந்த நிலை. தன்னிறைவும் என்பது ஒருவரின் முழுத் திறனையும் உணர்ந்து தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் உச்ச அனுபவங்களைப் பின்தொடர்வதைக் குறிக்கிறது. வரைவு நீட்டிக்கும் தலைவனைத் தோழி பழித்துப் பேசும் வேளையில், தலைவி தன் தலைவன் மேல் தான் கொண்ட காதல் தன்னிறைவானது என்பதை,

*"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று*
*நீரினும் ஆரள வின்றே சாரல்*
*கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன்*
*இழைக்கும் நாடனொடு நட்பே" (குறுந்.3)*

என்று பாடுவதன் வழியாகத் தலைவன் மீதான காதல் நிலத்தை விட பெரிதென்றும் வானை விட உயர்வென்றும் கடலைக்காட்டிலும் ஆழமுடையதென்றும் குறிப்பிடுவதன் வழியாகத் தலைவி தன்னிறைவை நாடுவதையும் தலைவனைத் தன்னிறைவாய்ப் பொருந்திக் கொள்வதையும் அறிய முடிகின்றது

**தொகுப்புரை**

இயல்பாய் அமைந்த மனிதனது முழுமையான வாழ்க்கை தேவைகளின் படிநிலையில் அமைந்துள்ளது என்பதை ஆய்ந்தறிய முடிகின்றது. ஆபிரகாம் மாஸ்லோ தனது கோட்பாட்டில் மனித தேவைகளை அடிப்படைத் தேவைகள், உயர்நிலைத் தேவைகள் என வேறுபடுத்தி நோக்கினார். அதாவது ஒரு தேவையின் தோற்றம் பிரிதொரு தேவையைப் பூர்த்தி செய்வதிலிருந்து எழுகின்றது. இவரது தேவைப் படிநிலையில் ஒவ்வொரு தேவையும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு கொண்டதாகவும், ஆளுமை விருத்தியில் குறைந்ததிலிருந்து உயர்ந்த நிலையை நோக்கிச்செல்வதாகவும் அமைகிறது. இவரது கோட்பாடானது குறுந்தொகைப் பாடல்களோடு ஒப்பிடும் போது சங்க அகமாந்தர்கள் வாழ்விலும் மேற்மட்ட அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாதல் அவசியமாகிறது. இத்தேவைகள் பூர்த்தியாகின்ற போது தன்னியல் தேவையானது **'தன்னை உணரச் செய்கிறது'** தன்னைத் தான் உணருதல் என்பது மனிதனின் வாழ்வைச் செம்மைப்படுத்தும் ஆகையால் மாஸ்லோவின் தேவை நிறைவுக்கோட்பாடு பழந்தமிழ் மாந்தர் வாழ்வியலோடு பொருந்திப் போவதை குறுந்தொகைப் பாடல்கள் மூலமாக அறிய முடிகின்றது. எவ்வாறாயினும், படிநிலையானது கடினமானது அல்ல என்பதையும், சில தனிநபர்கள் கீழ்நிலைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டாலும் கூட உயர் மட்டத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கக்கூடும் என்பதையும் அவர் ஒப்புக்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**துணை நின்றவை**


1. Maslow, A.H. (1943), A Theory of Human Motivation, Psychological Review.
2. Maslow, A.H. (1954), Motivation and Personality, New York: Harper and Row.
3. சாமிநாதையர் டாக்டர் உ.வே. (உரை), குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சா நூல்நிலையம், சென்னை, ஏழாம் பதிப்பு 2017.